1970 மார்ச் 6]

படுகின்ற வாசகங்கள் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறுவது போல் கருத்துக்குக் கருத்து பதில் அளிக்கும் வகையில் இல்லை. அந்த வாசகங்கள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன.

"துப்பாக்கிக் குழலிலிருந்துதான் அரசியல் அதிகாரம் வளர்கிறது. மே தினத்தன்று படைக்கலம் ஏந்த நாங்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம். தோட்டாக்கள் வாயிலாகவே விடுதலையை அடைய முடியும். வாக்குகள் மூலம் பெற இயலாது. மா. சே. துங் பாதையை நாங்கள் பின்பற்றுவோம்".

மேற்கண்ட வாசகங்களின் காரணமாகத்தான் தமிழ்நாடு காவல் துறையினர் நிலைமைகளைத் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள்.

Thefts in Nurses Home

* 231 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of frequent thefts in Nurses Home near General Hospital in recent times; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 1969-ம் ஆண்டில் செவிலியர் விடுதியில் மூன்று திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன. 1970-ல் இதுவரை எவ்வித திருட்டும் நடைபெறவில்லை.

(ஆ) 1969-ம் ஆண்டில் நடைபெற்ற மூன்று திருட்டு சம்பவத்திலும், போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். போலீசார் மேற்கொண்ட விசாரணையில் போதிய அளவு துப்புகள் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

திரு. கே. விநாயகம்: அந்த இடத்தில் திருட்டுப் போனதாகச் சொல்லப்படுகின்ற பொருளின் மதிப்பு என்ன? இவ்வளவு திறமையான போலீசாரை வைத்துக் கொண்டிருந்தும் கூட அதைக் கண்டு பிடிக்காமல் போனார்கள் என்று சொல்வது அரசுக்கு இழுக்கு அல்லவா? வெட்கப்பட வேண்டிய நிலைமை அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நோக்கில் குற்றச்சாட்டு கூடாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தச் சிறிய திருட்டைக் கண்டு பிடிக்க முடியாமல் போனது வெட்கப்பட வேண்டிய விஷயம் அல்லவா என்று திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். முதலிலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது பெரிய குற்றத்தைச் செய்த ஒரு பெரிய குழுவையே பிடித்தார்கள் என்று சொல்லும்போது திரு. விநாயகம் அவர்கள் எழுந்து 'அவர்கள் பாராட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள் அல்லவா?' என்று கூறியிருந்தால் நாம் கூடப் பாராட்டி இருக்க முடியும். திருட்டுப் போன சாமான்கள் செல்வி மங்கையர்க்கரசி என்கிற மாணவி அறையில் 40 ரூபாய்; செல்வி அம்சவல்லி

என்கிற மாணவியின் இரண்டு காதணிகள், ஒரு மோதிரம், ஒரு கடிகாரம்; செல்வி பத்மஜான், செல்வி எமிலி என்கிற மாணவிகளிடமிருந்து முறையே முக்கால் சவரன் மதிப்புள்ள காதணியும், 75 ரூபாய் மதிப்புள்ள புடவை—ஆகியவை களவு போய் விட்டதாகப் புகார் செய்யப்பட்டது. குவார்ட்டர்சில் வேலை செய்யும் பணியாளர்கள் இதில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று போலிசார் அவர்களை விசாரித்தனர். போதுமான ரப்பு இன்னும் கிடைக்கவில்லை.

பி. டி. ஆசிரியர் மாநாடு

***232 வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 மார்ச் மாதம் கோவை மாவட்டத்தில் நடந்த பி.டி. ஆசிரியர்கள் மாநாட்டின் முடிவை ஒட்டி அவர்களின் கோரிக்கைகள் அரசுக்கு அனுப்பப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அந்த மாநாட்டிலே எழுப்பப்பட்ட பல கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. சில அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்னென்ன ? அவற்றில் எவை அரசினால் கவனிக்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலைப் பள்ளிகளோடு இணைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதற்கு நடவடிக்கை எடுத்து 13—1—1970-ம் தேதியன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். வீட்டு வாடகைப்படி தருவதைப் பற்றி இப்போது இருக்கிற வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது. மருத்துவ வசதி எல்லா ஆசிரியர்களுக்கும் செய்து தரப் பட வேண்டுமென்பதும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மாநில அரசின் அவார்டு வழங்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஏற்கெனவே துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமே ஸ்டேட் அவார்டு வழங்கப்பட்டு வருகிறது. இது 35 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு மாவட்டத்திற்கு இரண்டு ஆசிரியர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தது தற்போது மேலும் 10 மாவட்டங்கள் அதிகப்படுத்தி 45 மாவட்டங்களில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவார்டு வழங்கப்பட இருக்கிறது. அந்த அவார்டை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்